இஸ்லாத்தின் பார்வையில்

உலகை அச்சுறுத்தும் பூகம்பங்கள் ஏன்?

அல்-ஈமான் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நிமிடங்கள்....

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹிம்.

எல்லாம் வல்ல அல்லாஹ்விற்கே புகழனைத்தும் உரித்தாகட்டும். அவனது அன்பும் அருளும் நபி(ஸல்) அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தார், தோழர்கள் நம் அனைவருக்கும் உண்டாவதாக!

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்).

இன்றைய உலகம் எவ்வளவுக்கு அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மாறு செய்ய முடியுமோ அதனைச் செய்து கொண்டிருக்கிறது. அண்மையில் நடந்த சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாரிய அழிவுகளை நாம் சந்தித்து அனுபவித்த பின்னர் கூட தமது நடவடிக்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதாக இல்லை. இத்தருணத்தில் மக்களுக்கு இது போன்ற பிரசுரத்தின் மூலம் இஸ்லாத்தின் பார்வையில் இவ்வனர்த்தங்கள் ஏன் என்பதை தெளிவு படுத்தி அவர்களை நல்வழிப்படுத்துவது அவசியம் என்பதை எமது அல்-ஈமான் சனசமூக நிலையம் உணர்ந்து இவ்வெளியீட்டினை இலவசமாக உங்கள் கைகளில் கொண்டு வந்திருக்கிறது.

உலகில் பிறந்த மனிதர்கள் சிறந்தவர்களாக வாழ்ந்து மறுமையை அடையும் போது வெற்றி பெற்றவர்களாக திகழ வேண்டுமென்று கருணையாளனான அல்லாஹ் நமக்கு திருக்குர்ஆன் மூலமாகவும் திருத்தூதர் (ஸல்) அவர்கள் மூலமாகவும் உபதேசிக்கின்றான். அந்த உபதேசங்களுக்கு கட்டுப்படாதவர்களை மறுமையை நினைவூட்டி, அது ஏற்படுவதற்கான அடையாளங்களையும் சுட்டிக்காட்டி அச்சுறுத்துகின்றான். இந்த அடையாளங்கள் தொடர்பான நபி(ஸல்)அவர்களின் பொன்மொழி ஒன்றில், 'நிலநடுக்கம் அதிகரிக்கும்' என்று கூறியுள்ளார்கள். (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி, முஸ்லிம்) நிலநடுக்கத்தைப் பற்றி ஆய்வு செய்தால் இப்போது அதுவும் அதிகமாக ஏற்பட்டுக் கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் இடம் பெற்ற இராட்சத அலைகளால் பல்லாயிரம் உயிர்களையும் உடைமைகளையும் இழந்தோம். இந்திய குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் கட்டிடங்கள் இடிபாடுக்குள்ளாகி பல்லாயிரம் உயிர்கள் பலியாகின. அதைத்தொடர்ந்து அந்த மாநிலத்தை ஒட்டிய பகுதிகளிலும், தமிழகத்தின் பல பகுதிகளிலும் அமெரிக்கா, ஈரான் போன்ற நாடுகளிலும் நிலநடுக்கம் அடுத்தடுத்து ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. மறுமையை நம்பாத மக்களுக்கு மறுமை ஏற்படும் என்பதற்கு அடையாளமாக அறிவிக்கப்பட்ட நிலநடுக்கம் அதிமாக ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. இந்த நிலநடுக்கத்தினால் சிலரை அழித்து மற்றவர்களை இதன் மூலம் எச்சரிக்கின்றான். படிப்பினை பெறச் செய்கின்றான்.

இறைவனின் வாக்கு என்றும் பொய்யானது கிடையாது. அவனின் வாக்குப் படி இந்த நிலநடுக்கங்கள், அதனால் ஏற்படும் இராட்சத அலைகள் அதிகரித்தால் அதனால் ஏற்படும் பாதிப்புகளை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. இவைகளை மனதில் பதியவைத்து அல்லாஹ்வின் மீது அச்சம் கொண்டு இறைவனையும் அவனைச் சந்திக்கும் மறுமையையும் நம்ப வேண்டும். மனிதனால் எவ்விதத்திலும் தவிர்க்க முடியாத, இது போன்ற நிகழ்வுகளினால் மரணிப்பவர்களுக்கு அல்லாஹ் 'ஸஹீத்' (உயிர்த்தியாகிகள்) என்ற உயர் அந்தஸ்தை வழங்குவதாக இஸ்லாம் கூறுகின்றது. (புகாரி, முஸ்லிம்) இந்த அனர்த்தத்தில் அதாவது நீரில் மூழ்கி, இடிபாடுகளில் சிக்கி மரணித்த விசுவாசிகளான நல்லடியார்களுக்கு அல்லாஹ் கியாமத் நாளில் நற்பேறு வழங்குகின்றான் என்பதை நம்பி மனநிறைவடைய வேண்டும். மரணித்த நம் நேசத்திற்குரிய முஸ்லிம் சகோதர, சகோதரிகள், பாலகர்கள் அனைவரும் அல்லாஹ்வின் பேரருளைப் பெற்ற பாக்கியசாலிகள் என்றே முஸ்லிம்களாகிய நாங்கள் கருத வேண்டும்.

நாம் இதுவரை காலமும் வாழ்ந்த வாழ்க்கையை மறந்து, அல்லாஹ்விற்கும் அவனது தூதர் (ஸல்) அவர்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றிலும் கட்டுப்பட்டு வாழ ஏக வல்லோன் எமக்கு அருள் பாலிப்பானாக!

இதனை பிரசுரமாக வெளியிடுவதற்கு பெரிதும் உதவிய மௌலவி அல்-ஹாபிழ் எம்.ரீ.அப்துல் காதர் பலாஹி, மௌலவி எம்.எச்.றியாழ் காஷிபி ஆகியோருக்கும், கணனி வடிவமைப்பு உதவி புரிந்த எம்.முகம்மது சிபாஸ், அழகிய முறையில் அச்சிட்டு உதவிய நிந்தவூர் பிரிண்ட்கொம் நிறுவனத்தினர் மற்றும் உதவி புரிந்த அனைவருக்கும் வல்ல அல்லாஹ் அவர்களது ஈருலக வாழ்விலும் செழிப்பை ஏற்படுத்துவானாக!

அன்புடன்,

எம்.முகம்மது ஜபறுல்லா
அல்-ஈமான் சனசமூக நிலையம்,
நிந்தவூர்.
21.01.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகை அச்சுறுத்தும் பூகம்பங்கள் ஏன் ?

இன்று உலகம் விஞ்ஞானத்தின் உச்சகட்டத்தில் சென்று கொண்டிருக்கிறது. யாருமே சாதித்திடாத சாதனைகளை நினைத்து நாம் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த சாதனைகள் ஒரு புறத்தில் இருந்தாலும், இன்று இவ்வுலகை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் அபாயங்கள் மறுபுறத்தில் இருந்து கொண்டு இவ்வுலகை நிம்மதியின்றி இருக்கச் செய்து கொண்டிருக்கிறது. எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்கின்ற அளவுக்கு ஆபத்துக்கள் நம்மை சூழ்ந்து இருப்பதை நாம் அவ்வப்போது உணர்ந்து வருகிறோம்.

உலகின் துருவ பிரதேசங்களான ஆட்டிகா, அந்தாட்டிகா போன்ற பனி பிரேதசங்களிலிருந்து பனி மலைகள் உருகி வருவதாகவும், ஒரு குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்குப் பிறகு இதன் பாதிப்பால் கடலின் நீர்மட்டம் கிட்டத்தட்ட ஏழு மீட்டருக்கு மேல் உயரக் கூடிய நிலையும், இதனால் பல நாடுகள், நகரங்கள் நீரில் மூழ்கக் கூடிய அபாயங்களும் இருப்பதை விஞ்ஞானிகள் ஆய்வு செய்து கூறி வருகிறார்கள். இதோடு ஆங்காங்கே வெள்ளப் பெருக்கு, எரிமலை வெடிப்பு, புயற்காற்று இதைவிட இன்று எல்லோரையும் பீதியடையச் செய்து கொண்டிருக்கின்ற பூகம்பங்கள் என்பன எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்கின்ற அச்சம் இன்று உலக மக்கள் அனைவரையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது.

புவியியல் ஆராய்ச்சியாளர்களின் கூற்று

இந்த பூகம்பங்கள் பற்றியும், கடலடி நிலநடுக்கத்தின் அதிர்வுகளால் உண்டாகும் சுனாமி பற்றியும், இவை எப்படி ஏற்படுகின்றது என்பதையும் புவியியல் ஆராய்ச்சியாளர்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தாலும், எந்த இடத்தில் எப்பொழுது ஏற்படும்? என்ற அவர்களின் கருத்துக்கள் பெரும்பாலும் மாற்றமாகவே அமைகின்றன. தமிழ் நாட்டில் பூகம்பங்கள் ஏற்பட வாய்ப்பே இல்லை என்று புவியியல் ஆராய்ச்சி மையம் கூறியிருந்தது. இன்று தமிழகத்திலும் ஆங்காங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நில அதிர்வுகள் ஏற்பட்டவுடன் எதிர்காலத்தில் பெரிய பூகம்பம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது என்று கூறியிருப்பதை நாம் பார்கின்றோம்.

மூன்று அடுக்குகளைக் கொண்டது நமது பூமி. இதன் உட்புறக்கருவிலும், அதை ஒட்டிய நடுப்பகுதியிலும் 5,000 டிகிரி செண்டிகிரேட் வரை வெப்ப நிலையில் கொதிக்கும் குழம்பு இருக்கிறது. இதன் மேற்புறம் இருக்கும் தட்டில் தான் நாமெல்லாம் இருக்கிறோம். இந்தத்தட்டு, நிலப்பகுதியில் 32 முதல் 71 கிலோ மீற்றர் தடிமனும், கடலின் ஆழப்பகுதியில் நான்கு முதல் பத்து கிலோ மீற்றர் தடிமனும் கொண்டது. இந்தத்தட்டு பூமிப்பந்து முழுமைக்கும் ஒன்றாக இல்லை. கால்பந்தின் மேலே இருக்கும் கட்டிடங்கள் போல பன்னிரெண்டு தனித்தனி தட்டுகளாக உள்ளது. இந்த பன்னிரெண்டு தட்டுகளின் மேல்தான் எல்லா கண்டங்களும் கடல்களும் இருக்கின்றன.

பூமிப்பந்தின் உட்புறக்குழம்பில் ஏற்படும் வெப்பநிலை மாறுபாடுகளால் இந்தப் பன்னிரெண்டு தட்டுக்களும் மெல்ல நகர்ந்து தங்களை 'அட்ஜஸ்ட்' செய்து கொள்கின்றன. இந்த நகர்வு மிக மெதுவாகவே நிகழ்ந்தாலும் அதன் விளைவுகள் பயங்கரமானவை. நகரும் முயற்சியில் இத்தட்டுக்கள் ஒன்றோடொன்று உரசிக் கொள்கின்ற சமயத்தில் தான் பூகம்பம் ஏற்படுகிறது. ஒரு வருடத்தில் உலகம் முழுக்க நடக்கின்ற பூகம்பங்களின் மொத்த சக்தி கிரோஷிமாவை அழித்த அணுகுண்டைப் போல ஒரு இலட்சம் அணுகுண்டுகளுக்கு ஈடானது. கடலுக்கடியில் ஒரு பூகம்பமோ எரிமலைச் சீற்றமோ ஏற்படும் போது அதன் வீரியத்தைப் பொறுத்து 'சுனாமி' ஏற்படுகிறது.

மேலும் பூகம்பத்திலிருந்து எப்படி நம்மை காப்பாற்றிக் கொள்வது, அதற்காக எப்படி விடுகளை அமைத்துக் கொள்வது, இது போன்ற யோசனைகளை புவியியல் வல்லுநர்கள் தந்து கொண்டிருந்தாலும், பெரும்பாலும் இவை எல்லாம் சாத்தியமற்றது என்பதே உண்மை. பூகம்பங்கள் திடீரென ஏற்படுவதும், இதனால் உண்டாகும் அழிவுகளும் மனித சக்தியை தாண்டிய ஒரு சக்தியால் தான் நடைபெறுகிறது என்பதை அறிவுடைய, சிந்திக்கக் கூடிய அனைவரும் உணர்ந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப்பட்ட சூழ்நிலையில் எல்லாவற்றிற்கும் வழிகாட்டக் கூடிய இஸ்லாம் மார்க்கம் 1400 வருடங்களுக்கு முன்பே இவை பற்றி முன்னறிவிப்புச் செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்த அழிவுகளைப் பற்றியும், இந்த அழிவில் இருந்து நம்மைத் தற்காப்பது எப்படி? என்பதைப் பற்றியும் நாம் அறிவது அவசியமாகும்.

உலகத்தின் ஒழுங்கமைப்பு

நாம் இதை ஆராய்வதற்கு முன் முதலில் இவ்வுலகத்தின் ஒழுங்கமைப்பைப் பற்றி ஆராய வேண்டியது அவசியமாக உள்ளது. அல்லாஹ் இந்த உலகத்தை வீணாகப் படைக்கவில்லை. அவன் படைத்த அத்தனை படைப்புகளும் ஓர் ஒழுங்கமைப்போடு இயங்கி வருகின்றது. கோடான கோடி வருடங்களாக நிலைபெற்று வரும் இந்த பூமியில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. சூரியன், சந்திரன் எந்த கட்டளைக்கு உட்பட்டு உள்ளதோ அதன்படி அவைகள் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன.

இந்த பூமியை நிலைபெறச் செய்ய உயர்ந்து நின்று கொண்டிருக்கின்ற மலைகள், அதிலிருந்து உற்பத்தியாகக் கூடிய ஆறுகள், வானத்தில் கட்டுப்படுத்தப் பட்டிருக்கின்ற மேகங்கள், அதிலிருந்து மழைத் துளிகள் வெளிப்பட்டு இறந்து கிடக்கின்ற பூமியை உயிர்ப்பித்து அதிலிருந்து விதவிதமான உணவுப் பொருட்களை உற்பத்தியாக்கி தருவது போன்ற எத்தனையோ சான்றுகளை நாம் நம் கண்ணெதிரே காணும் பொழுது இதன் உண்மை நமக்கு புலனாகிறது.

இந்த உலகத்தை அல்லாஹ் வீணாகப் படைக்கவில்லை என்றால் எந்தக் காரணத்திற்காகப் படைத்தான்? இந்த உலகத்தில் அல்லாஹ் படைத்த அத்தனை படைப்பினங்களும் மனிதனுக்கு கட்டுப்பட்டு இருக்கின்றன. மனிதர்களுக்கு சேவை புரிகின்றன. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் மனிதனுக்காகவே இந்த உலகம் படைக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் இந்த மனிதன் எதற்காக படைக்கப்பட்டுள்ளான் என்பதை நாம் சிந்தித்தாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ் தன் திருமறையில் கூறுகின்றான்,
'மனித வர்க்கத்தையும், ஜின் வர்க்கத்தையும் படைத்தது என்னை வணங்குவதற்கே அன்றி வேறெதற்குமில்லை'. (அல்குர்ஆன் 51:56)

'அல்லாஹ் மனிதனை பிரதிநிதிகளாக இவ் உலகத்தில் படைத்தான். அவனே உங்களை பூமியில் பிரதிநிதிகளாக ஆக்கியிருக்கின்றான்' (அல்குர்ஆன் 35:39)

முதன் முதலில் அல்லாஹ் ஆதம் (அலை) அவர்களை களிமண்ணிலிருந்து படைத்து, மலக்குமார்களையும், ஷைத்தானையும் ஸஜ்தா செய்யுமாறு கட்டளையிட்டான். மலக்குமார்கள் ஸஜ்தா செய்தார்கள். ஷைத்தான் கர்வம் கொண்டான். அல்லாஹ்வின் கட்டளையை புறக்கணித்து, களிமண்ணால் படைக்கப்பட்ட மனிதனுக்கு ஸஜ்தா செய்ய மறுத்து விட்டான். இதனால் ஷைத்தான் அல்லாஹ்வால் சபிக்கப்பட்டான். மேலும் தான் வழிதவறி விட்டதால் மனிதர்களையும் வழிதவற வைப்பதற்கு இறுதி தீர்ப்பு நாள் வரை அவகாசம் வாங்கிக் கொண்டான்.

'என்னை நீ வழிகேட்டில் ஆழ்த்திய காரணத்தால் திண்ணமாக நானும் இம் மனிதர்களை உன்னுடைய நேரான வழியில் செல்ல விடாமல் தடுப்பதற்காக தருணம் பார்த்துக் கொண்டிருப்பேன். பிறகு அவர்களின் முன்னும், பின்னாலும், வலது புறமாகவும், இடது புறமாகவும் அவர்களிடம் வந்து சுற்றி வளைத்துக் கொள்வேன். மேலும் அவர்களில் பெரும்பாலானோரை நன்றி செலுத்துபவராக நீ காணமாட்டாய். அதற்கு அல்லாஹ் கூறினான், நீ இழிந்தவனாகவும், விரட்டப்பட்டவனாகவும், இங்கிருந்து வெளியேறிவிடு. (உன்னையும்) அவர்களில் இருந்து பின்பற்றுகின்றவர்கள் அனைவரையும் நரகில் போட்டு நிரப்புவேன்.' (அல்குர்ஆன் 7:16-18).

இதிலிருந்து இறைவன் விதித்த இறுதித் தீர்ப்பு நாள் வரை மனிதனை நேர்வழியினை விட்டு வழிதவற வைப்பதற்கும், எந்த நோக்கத்திற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் மனிதனை படைத்தானோ, அந்த நோக்கத்தை நிறைவேற்ற விடாமல் அவனை தடுத்து வழிகெடுப்பதற்கும் ஷைத்தான் தன் முழுச் சக்தியை திரட்டி நிற்பது ஒரு புறமிருக்கட்டும். அல்லாஹ் ஆதம் (அலை) அவர்களை பூமிக்கு அனுப்பி 'என்னுடைய வழிகாட்டுதல்கள் உங்களுக்கு வந்து கொண்டிருக்கும். அதனை பின்பற்றி நேரான வழியில் நடந்தீர்கள் என்றால் நிலையான தங்குமிடமான சுவர்க்கத்தில் நுழைவிப்பேன' என்று வாக்களித்ததோடு, ஒவ்வொரு சமுதாயத்திற்கும் வழிகாட்ட தூதர்களை அவர்களிடமிருந்தே தோற்றுவித்து அத்தூதர்களுக்கு அல்லாஹ் தன்னிடமிருந்து சான்றுகைளை வழங்கி வழிகாட்டுவதற்கு அனுப்பினான். அந்த தூதர்கள் இறைவனின் சான்றுகளை (அற்புதங்கள்) மக்களுக்கு காட்டினார்கள். . மேலும் வேதத்தை ஓதிக்காட்டி நேர்வழி காட்டினார்கள். இறுதி தீர்ப்பு நாளை குறித்து மக்களுக்கு எச்சரிக்கை செய்தார்கள். இப்படியாக இறைத் தூதர்களை அல்லாஹ் எல்லா சமுதாயத்திற்கும் அனுப்பியிருந்தான். எந்த அளவிற்கு என்றால் இறைத் தூதர்கள் அனுப்பப் படாத சமுதாயமே இல்லை எனலாம். ஒரு புறம் ஷைத்தானிய சக்தி (மக்களை தீய வழியில் செலுத்தக் கூடியது) மற்றொரு புறம் இறைவழிகாட்டுதல் (மக்களை நேர்வழியில் செலுத்தக் கூடியது) இவை இரண்டில் எதையும் தேர்ந்தெடுக்க மனிதனுக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கின்றது. இதில் மனிதன் எந்த ஒன்றை தேர்ந்தெடுத்தாலும் அதற்குண்டான தீர்ப்பை மறுமையில் (இறுதி தீர்ப்பு நாளில்) இறைவன் வழங்குகின்றான். இது தான் இவ்வுலகின் ஒழுங்கமைப்பின் இரகசியம், இதிலிருந்து நாம் ஒவ்வொன்றையும் அணுக வேண்டியிருக்கிறது.

அல்லாஹ் இந்தத் தூதர்களை தன் வழிகாட்டுதலின் படி ஒவ்வொரு சமுதாயத்தாரிடமும் அனுப்பிய பிறகு, பெரும்பாலான சமுதாயத்தினரிடையே சிலர் இறைத் தூதர்களின் வழிகாட்டுதலை ஏற்றுக் கொண்டார்கள். சிலர் பகிரங்கமாக எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் இறைத்தூதர்களையும், அவரை பின்பற்றிய இறை நம்பிக்கையாளர்களையும் தொல்லையும், கொடுமைகளையும், இழைத்தார்கள். சிலர் தூதர்களைக் கொலையும் செய்தார்கள். இறைத் தூதர்களை சூனியக்காரர்கள், பைத்தியக்காரர்கள் என்று அவதூறுகளை அள்ளி வீசினார்கள். மேலும் இறைத் தூதர்களை புறக்கணித்து இறை நிராகரிப்பிலே மூழ்கி சிலைகளையும், ஜின்களையும், ஷைத்தான்களையும் வழிபட்டு மன இச்சைப்படி வாழ்ந்தார்கள்.

இப்படி அநியாயம் விளைத்த சமுதாயத்தினர்கள் மத்தியில் அல்லாஹ் அவர்களின் செயல்களை திருத்துவதற்கு ஒவ்வொரு தடவையும் சில சோதனைகள் மூலம் குறிப்பிட்ட அவகாசத்தை கொடுத்தே வந்திருக்கின்றான். அதையும் அவர்கள் பொருட்படுத்தாமல், தன் செயல்களிலிருந்து மீளாமல் தொடர்ந்து கொடுமை புரிகிறவர்களாக இருக்கும் பட்சத்தில் அல்லாஹ் அவனது தூதர்களையும், இறை நம்பிக்கை கொண்டவர்களையும் காப்பாற்றி, இறை நிராகரிப்பாளர்களை கொடுமை புரிந்த அந்த சமுதாயத்தினரை முற்றிலும் அழித்திருக்கின்றான்.

எந்த சமுதாயம் இறைவனை நிராகரித்து மன இச்சைகளை பின்பற்றி இறைத் தூதர்களுக்கு கொடுமையிழைத்து அநியாயம் செய்ய தலைப்படுகிறார்களோ, அவர்களுக்கு இறைவன் தன் செயல்களை திருத்திக் கொள்வதற்கு குறிப்பிட்ட அவகாசம் அளிக்கின்றான். அதிலிருந்து அவர்கள் மீளவில்லை என்றால் அழிவு அவர்கள் மீது சாட்டப்படுகின்றது. இது இறைவனின் நியதியாகும்.

சில சமுதாயங்கள் அடைந்த கதி.

நூஹ்(அலை) அவர்களை அல்லாஹ் தன் வழிகாட்டுதலின் படி அவர் சமூகத்தினரிடம் அனுப்பினான். அந்த சமூகத்தினர்கள் நூஹ்(அலை) அவர்களை பொய்யரென்று தூற்றிவிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியில் நூஹ்(அலை) அவர்களையும் அவருடன் நம்பிக்கை கொண்டவர்களையும் அல்லாஹ் காப்பாற்றினான். அநியாயம் செய்த அந்த சமூகத்தினரை நீரில் மூழ்கடித்து அழித்தான்.

ஆத்(து) சமூகத்தினரிடம் நபி ஹூது (அலை) அவர்களை அல்லாஹ் சத்தியத்துடன் அனுப்பினான். அந்த சமூகத்தினர் ஹூது நபியை நிராகரித்து, கொடுமை புரிகிறவர்களாக இருந்த காரணத்தால் ஹூது (அலை)அவர்களையும், அவருடன் நம்பிக்கை கொண்டவர்களையும் அல்லாஹ் காப்பாற்றினான். நிராகரித்த அந்த மக்களை பெரும் காற்று, மழை மூலம் அல்லாஹ் அழித்தான்.

லூத் சமூகத்தினரிடம் அல்லாஹ் தன் தெளிவான சான்றுகளுடன் அம்மக்களுக்கு நேர்வழிகாட்ட லூத் நபியை அனுப்பினான். அவர்கள் லூத் நபி அவர்களை நிராகரித்ததுடன், உலகில் இதுவரை யாருமே செய்யாத அநியாயத்தை செய்து வந்தார்கள். ஆண், பெண்களை விடுத்து, ஆணுடனே தன்னினச் சேர்க்கையில் ஈடுபட்டு வந்தார்கள். இதன் விளைவாக அல்லாஹ் அவர்கள் மீது சுட்ட களிமண் பொழிவை ஏற்படுத்தி அந்த ஊரை தலைகீழாக புரட்டிவிட்டான். லூத்(அலை) அவர்களை, அவருடன் நம்பிக்கை கொண்டவர்களையும் அல்லாஹ் காப்பாற்றினான்.

மத்யன் வாசிகளிடம் அல்லாஹ் ஷுஐப் (அலை) அவர்களை தன் நேர்வழி காட்டுதலின் படி அனுப்பினான். அம்மக்கள் அவரை பொய்யரென்று கூறி இறை நிராகரிப்பில் மூழ்கி இருந்த தோடு அளவை நிறுவைகளில் மோசடி செய்த காரணத்தாலும் அழிவு அவர்கள் மீதும் சாட்டப்பட்டது. அல்லாஹ் மாபெரும் நிலநடுக்கத்தை ஏற்படுத்தினான். அவர்கள் வீடுகளில் தலைகுப்புற வீழ்ந்து கிடந்தார்கள். மேலும் ஷுஐப் (அலை) அவர்களையும், அவருடன் நம்பிக்கை கொண்டவர்களையும் அல்லாஹ் காப்பாற்றினான்.

மேலும் மூஸா(அலை) அவர்களை தன் சான்றுகளுடன் பிர்அவுனிடமும் அவனது மக்களிடமும் நேர்வழிகாட்ட அனுப்பினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பிர்அவுனும், அவனைச் சார்ந்தவர்களும் கர்வம் கொண்டார்கள், மூஸா(அலை) அவர்களை நிராகரித்ததுடன் அவரை மாபெரும் சூனியக்காரர் என்று கூறி அவரது சான்றுகளை மறுத்ததுடன், அவரையும் அவருடன் நம்பிக்கை கொண்டவர்களையும் அழிக்க புறப்பட்டு வந்து கொண்டிருக்கும் பொழுது அல்லாஹ் மூஸா(அலை) அவர்களையும், அவருடன் நம்பிக்கை கொண்டவர்களையும் காப்பாற்றினான். மேலும் பிர்அவுனையும் அவனது கூட்டத்தார்களையும் கடலிலே மூழ்கடித்து அழித்தான்.

இந்த வரலாற்று நிகழ்ச்சிகளையெல்லாம் நமக்கு ஒரு படிப்பினையாக இறைவன் அமைத்து தந்துவிட்டான். அதோடு அல்லாமல் இன்றைக்கும் சில சமுகத்தினரின் அழிவுச் சின்னங்கள் மறையாமல் நம் கண் முன்னே காணக் கிடக்கின்றன. இந்த உண்மைகளை சிந்தித்து நாம் படிப்பினை பெற வேண்டும் என்று அல்லாஹ் நமக்கு அறிவுறுத்துகிறான்.

'முன்பு வாழ்ந்து சென்ற புவிவாழ் மக்களுக்குப் பின்னர் பூமிக்கு வாரிசாக வந்துள்ள இவர்களுடைய பாவங்களின் காரணமாக நாம் நாடினால், இவர்களையும், (அவ்வாறே) பிடித்திருப்போம் என்ற விசயம் இவர்களுக்கு விளங்கவில்லையா? (அல்குர்ஆன் 7:100).

இதிலிருந்து ஒரு பேருண்மை நமக்கு தெரியவருகிறது. இந்த உலகத்தில் எப்பொழுது எல்லா மக்களும் இறை நிராகரிப்பை மேற்கொண்டு அநியாயங்கள் செய்து, கொடுமைகள் புரிந்து, தீமைகளின் எல்லையைத் தாண்டும் போது அம்மக்களை இறைவன் அழித்திருக்கின்றான். அதே சமயத்தில் இறைவனை முற்றிலும் நம்பிக்கை கொண்டு, அவனையே சார்ந்து வாழ்ந்த மக்களை ஒவ்வொரு தடவையும் அல்லாஹ் காப்பாற்றி வந்திருக்கின்றான். அல்லாஹ்வை முற்றிலும் சார்ந்திருப்பவர்களுக்கு அவனே அவர்களுக்கு முற்றிலும் பாதுகாவலனாக இருக்கின்றான். அவர்களை பாதுகாப்பது அல்லாஹ்வுடைய கடமையாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த கருத்தை மனதில் கொண்டு முஹம்மது நபி(ஸல்) அவர்களின் இறுதி நபித்துவத்தைப் பற்றிய உண்மையை நாம் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். அல்லாஹ் மக்களுக்கு நேர்வழிகாட்டிட அனுப்பிக் கொண்டிருந்த தூதர்களில் இறுதியாக முஹம்மது(ஸல்) அவர்களை ஒட்டு மொத்த உலக மக்கள் அனைவருக்கும் வழிகாட்டக் கூடியவராகவும், ஓர் அருட்கொடையாகவும் அனுப்பினான்.

'அகிலத்தாருக்கு எச்சரிக்கை செய்யக் கூடியதாக தன்னுடைய அடியார் மீது (சத்தியத்தையும், அசத்தியத்தையும் பிரித்துக் காட்டும்) இந்த புர்கானை (குர்ஆனை) இறக்கி வைத்தானே, அத்தகையோன் மிக்க பாக்கியமுடையவன்.' (அல்குர்ஆன் 25:1).

இதற்கு முன்பு வந்து சென்ற நபிமார்கள் எல்லோரும் ஒவ்வொரு சமூகத்திற்கும் மட்டுமே வழிகாட்டக் கூடியவர்களாக இருந்தார்கள். ஆனால் முஹம்மது நபி(ஸல்) அவர்களை உலகம் முழுவதும் உள்ள அத்தனை மக்களுக்கும், எல்லா சமூகத்தினருக்கும் வழிகாட்டக் கூடியவராக இறைவன் ஆக்கினான்.

'(நபியே) நாம் உம்மை உலகத்தாருக்கு அருட்கொடையாகவே அனுப்பியுள்ளோம்.' (அல்குர்ஆன் 21:107).

அது மட்டுமல்ல முஹம்மது(ஸல்) அவர்களுக்கு பிறகு இறைச் செய்தியை சமர்ப்பிக்க எந்த ஒரு இறைத்தூதரும் வரமாட்டார். முஹம்மது நபி அவர்களே இறுதித் தூதர் ஆவார் என்பதை அல்லாஹ் அறிவித்து விட்டான்.

'அவர் அல்லாஹ்வின் தூதராகவும், இறுதி நபியாகவும் இருக்கிறார். அல்லாஹ் ஒவ்வொன்றையும் அறிந்தவனாக இருக்கின்றான்.'(அல்குர்ஆன் 33:40).

நபி (ஸல்) அவர்களை இறுதித்தூதர் என்று அறிவிக்கப்பட்டதை அடுத்து இறைவன் எச்சரித்த இறுதி தீர்ப்பு நாள் (கியாமத் நாள்) வரை நமக்கு நேர்வழியாக இருப்பது இறைவனின் வாக்கியமாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகுர்ஆனும், நபி(ஸல்) அவர்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை முறையும் தான். அது மட்டுமல்ல இந்த இஸ்லாத்தை அல்லாஹ் பரிபூரணமாக்கி விட்டதாகவும், அவனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மார்க்கமும் இஸ்லாம் தான் என்பதை இறைவனே அறிவித்து விட்டான். இதை தவிர்த்து வேறு எந்த மதமும் அவனால் அங்கீகரிக்கப்படவில்லை. இதன் அடிப்படையில் பார்க்கும் பொழுது இந்த இஸ்லாம் தான் உலகம் முடியும் வரை ஏற்படுகின்ற அத்தனை பிரச்சினைகளுக்கும் தீர்வாக இருக்கும். மேலும் மக்களுக்கு வழிகாட்டுதலாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆகவே இந்த ஆதாரங்களை வைத்து பார்க்கும் பொழுது ஒன்று மட்டும் உறுதியாக நமக்கு புலனாகிறது. இறைத்தூது முடிவு பெற்று விட்டதாலும், இஸ்லாமே இறுதி நாள் வரை அல்லாஹ்வால் ஒத்துக் கொள்ளப்பட்ட மார்க்கம் என்பதாலும் இறைவன் எச்சரித்து வந்த இறுதி முடிவு நாளை சந்திப்பது முஹம்மது நபி(ஸல்) அவர்களுடைய உம்மத்துகளாகிய நாம் தாம் என்பது திட்டவட்டமாக தெரிகின்றது. எனவே நாம் கியாமத் நாளை நோக்கிச் சென்று கொண்டிருப்பது முற்றிலும் உண்மை.

இப்படியிருக்க நம்மை வந்து அடைய இருக்கின்ற இந்த இறுதி நாள் எப்பொழுது வரும்.
இறைவன் கூறுகின்றான்:

'இறுதி தீர்ப்புக்குரிய நேரத்தைப் பற்றி அது எப்பொழுது (நிகழும்) வரும் என்று இவர்கள் உம்மிடம் கேட்கின்றார்கள், (நபியே) நீர் கூறும் அதைப் பற்றிய அறிவெல்லாம் என் இறைவனிடமே உள்ளது, அவனே அதற்குரிய நேரத்தில் அதை வெளிப்படுத்துவான். வானங்களிலும், பூமியிலும் (உள்ளவர்களுக்கு) அது மிகக் கடுமையான நேரமாயிருக்கும், அது திடீரென்று தான் உங்களை வந்தடையும்'. (அல்குர்ஆன் : 7:187).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியாமத் நாளைப் பற்றிய ஞானம் அல்லாஹ்விடத்தில் மட்டுமே இருக்கின்றது, அதை அவன் மறைக்கப்பட்ட விசயமாக்கி விட்டான். அதே சமயத்தில் அது திடீரென நாம் எதிர்பார்க்காத சூழ்நிலையில் நம்மை வந்தடையும் என்று அல்லாஹ் தன் திருமறையில் கூறியிருக்கின்றான். அந்த நாளின் நிகழ்வு எப்படியிருக்கும் என்றால், அல்லாஹ் கூறுகிறான்,

'நிகழ வேண்டிய அந்த நிகழ்ச்சி நிகழ்ந்து விடும்போது, அது நிகழ்வதைப் பொய்யெனக் கூறுபவர் எவரும் இருக்க மாட்டார். அது தலை கீழாக புரட்டக் கூடிய ஆபத்தாயிருக்கும். அந்த நேரம் பூமி ஒரே உலுக்காக உலுக்கப்படும். மேலும் மலைகள் பொடி பொடியாக்கப்பட்டு பரத்தப்பட்ட புழுதியாகிவிடும்.'

(அல்குர்ஆன் 56:1-6).

முஹம்மது நபி(ஸல்) அவர்கள் மூன்று மாபெரும் பூகம்பத்தைப் பற்றி அறிவித்துள்ளார்கள். அது பெரிய அளவில் நடக்க இருப்பவை. இதுவும் உலக அழிவிற்குண்டான காரணங்களில் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது. அல்லாஹ் இந்த உலகத்தை அழிப்பதற்கு கையாளுகின்ற எத்தனையோ வழிமுறைகளில் முக்கியமாக இந்த பூகம்பத்தை ஏற்படுத்துவான். காரணம் இவைகள் முற்றிலும் இறை வலிமையால் ஏற்படக் கூடியது. ஆனால் இன்று உலகெங்கும் ஆங்காங்கே ஏற்படுகின்ற நில நடுக்கங்களும் அதனால் ஏற்படுகின்ற உயிர்ச்சேதங்களும், பொருட் சேதங்களும் எதனை உணர்த்துகின்றன?

இன்றைய உலகத்தினர்களின் நிலை

இன்றைய உலகத்தினர்களுடைய நிலைகளை பார்த்தால் அவர்களிடம் தீமைகள் இதுவரை இல்லாத அளவுக்கு உச்சக்கட்டத்தை அடைந்து வருவதை பார்க்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இணைவைப்பு

அல்லாஹ் எந்தப் பாவங்களையும் அவன் நாடினால் மன்னிக்கக் கூடியவனாக இருக்கின்றான். ஆனால் இறைவனை நிகாரித்து அவனுக்கு இணை கற்பிப்பவர்களை ஒரு போதும் மன்னிப்பதில்லை. படைத்து, காத்து வரும் இறைவனை மறுப்பது ஒரு மாபெரிய மன்னிக்க முடியாத பாவமாக அல்லாஹ் கூறுகிறான். காரணம் தன் சான்றுகளை அவன் இவ்வுலகில் எல்லாப் பகுதிகளிலும பரப்பி வைத்திருக்கின்றான். ஆனால் மனிதன் தனக்கு தந்த பகுத்தறிவின் மூலம் சிந்திப்பதில்லை.

இறைவன் கூறுகிறான்,

'உங்கள் வணக்கத்துக்குரியவன் ஒரே ஒரு இறைவனே. அளவிலா கருணையும் இணையில்லா கிருபையும் உடையோனுமாகிய அவனை தவிர வேறு இறைவன் இல்லை. (இந்த உண்மையை அறிந்து கொள்ள சான்று வேண்டுமாயின்) வானங்கள், பூமி ஆகியவற்றின் ஒழுங்கமைப்பிலும், இரவு, பகல் ஒன்றன் பின் ஒன்றாக மாறி வருவதிலும், மக்களுக்கு பயன் தருபவற்றை சுமந்து கொண்டு கடலில் செல்லும் கப்பலிலும், மேலிருந்து அல்லாஹ் இறக்கி வைக்கும் மழை நீரிலும், பின்னர் அதைக் கொண்டு பூமியை அது இறந்து போன பின்னர் கூட உயிர்பித்து மேலும் (தனது இந்த ஏற்பாட்டின் மூலம்) அதில் எல்லாவிதமான உயிரினங்களையும் பரவச் செய்திருப்பதிலும், காற்றுகளைச் சுழலச் செய்வதிலும், வானங்களுக்கும், பூமிக்கும் இடையே கட்டுப்படுத்தப்பட்ட மேகங்களிலும் சிந்திக்கும் மக்களுக்கு ஏராளமான சான்றுகள் இருக்கின்றன. (ஆனால் இறைவன் ஒருவனே என்பதை தெளிவு படுத்தும் இத்தகைய தெளிவான சான்றுகள் இருந்தும்) மனிதர்களில் சிலர் அல்லாஹ்வை தவிர மற்றவர்களையும் (அவனுக்கு) நிகரானவர்களாய் ஆக்கிக் கொள்கிறார்கள்.' (அல்குர்ஆன் : 2:163-165).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று உலகத்தைப் படைத்து, பரிபாலித்து வரும் இறைவனை மறந்து, அவனுடைய சான்றுகளை மறுத்து, தானே உருவாக்கிய சிலைகளையும், கற்களையும் கடவுளாக்கி கொண்டார்கள். மேலும் தன்னையே காப்பாற்றிக் கொள்ள முடியாத பாம்பு, பசு, மரம், இன்னும் சூரியன், சந்திரன், கடல் இவைகளையும் கடவுளாக்கி கொண்டு வாழக் கூடியவர்களையும், இறைத் தூதரை இறைவனின் மகன் என்றும், இறைத் தூதர், அவரது தாயார் இவர்களையே கடவுளாக்கி இறைவனுக்கு இணை கற்பித்து வாழக் கூடியவர்களும், மன இச்சைகளை அடிப்படையாகக் கொண்டு எந்த ஒரு அடிப்படையும் இல்லாமல் மனம் போன போக்கில் வாழக் கூடியவர்களும் நிறையக் காணப்படுகிறார்கள். முந்தைய சமுதாயத்தினர் செய்த அதே தவறை ஏன் அதைவிட அதிகமாக இவர்கள் செய்துவருவதை நாம் கண் கூடாக கண்டு வருகிறோம்.

2. விபச்சாரம்

இன்று உலக அளவில் விபச்சாரம் பெருகிவிட்டது. எந்த அளவுக்கென்றால் விபச்சாரத் தொழிலை சட்டபூர்வமாக்க வேண்டும் என்று விபச்சாரிகள் கோரிக்கை எழுப்புகின்ற அளவுக்கு ஆகிவிட்டது. அது மட்டும் அல்ல இறைவன் கண்ணியமாக்கிய உறவுகளில் தகாத முறையில் உறவு வைத்திருக்கின்றவர்களையும் பார்க்கிறோம்.

நான்கு சுவர்களுக்குள் நடக்கின்ற உறவுகளை வெளியில் சொல்ல தடை விதித்தார்கள் முஹம்மது நபி(ஸல்) அவர்கள். ஆனால் இன்று நான்கு சுவர்களுக்குள் நடக்கின்ற விசயத்தை வெளியே கொண்டு வந்துவிட்டார்கள். அதை சினிமா, டி.வி. என்ற பெயரில் உலகத்துக்கே சிறியவர் முதல் பெரியவர் வரை அதை பார்க்கக் கூடிய நிலையை கொண்டு வந்துவிட்டார்கள். அது மட்டுமல்ல, லூத் சமூகத்தினர்கள் ஆண்கள் தன்னினச் சேர்க்கையில் ஈடுபட்டு கொடுமை புரியும் சமுதாயமாக இருந்தார்கள், அதனால் தான் அல்லாஹ் அவர்களை அழித்தொழித்தான். ஆனால் இன்று பெண்கள் ஆணில்லாமல் தங்களால் இல்லறத்தில் ஈடுபட்டு தனித்து வாழ முடியும் என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் உறவை சட்டபூர்வமாக்க வேண்டும் என்றும் மேலை நாட்டு பெண்கள் அதிசயமான கோரிக்கைகளையும், வழக்குகளையும் தொடுத்து வரக்கூடிய நிலையையும் பார்த்து வருகின்றோம்.

இன்று விஞ்ஞானம் எந்த அளவு வளர்ந்து கொண்டு வருகிறதோ அதன் மாயைகளில் மனிதன் சிக்கி தன்னை மறந்து ஒழுக்க சீர்கேடுகளிலும் வளர்ந்து கொண்டு வருகிறான் என்பது உண்மை.

3. வலியவர், எளியவருக்கு கொடுமையிழைத்தல்

இன்று பணம் படைத்தவன், மக்கள் பலம் கொண்டவன், அதிகாரம் உள்ளவன், தனக்கு கீழே உள்ள பலம் குன்றியவர்கள் மீது கொடுமைகள் புரிவது அதிகமாகிவிட்டது. இது ஒரு தனிப்பட்ட மனிதனிலிருந்து ஒவ்வொரு குழுக்கள், நாடுகள்வரை இது நடந்து கொண்டிருக்கிறது. வல்லரசு நாடுகள் வலிமை குன்றிய நாடுகளின் மீது தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்துகின்றது. காரணம் ஏதுமின்றி கட்டுப்பாட்டை விதிக்கிறது. பொருளாதார தடையை விதிக்கிறது. தன்னிடம் உள்ள பலத்திலும் தன்னை எதிர்ப்பவர் யாருமில்லை என்ற கர்வத்திலும் தேவையில்லாமல் குண்டுகள் வீசி மக்களை அழிக்கின்றது. இதைப் போல் பலம் கொண்ட மதங்கள் பலம் குன்றிய சிறுபான்மை மதத்தினர் மீது கொடுமை புரிகின்றது. அதனால் தான் இன்று எங்கு பார்த்தாலும் மதச் சண்டை, ஜாதிச் சண்டை இப்படியாக ஒருவருக்கொருவர் இரத்தம் சிந்திக் கொண்டும், கொடுமை புரிந்து கொண்டும் இருக்கக் கூடிய சூழ்நிலையை நாம் பார்க்கின்றோம்.

விஞ்ஞான வளர்ச்சிகளை அழிவுக்கு பயன்படுத்தி வருகிறார்கள். வலியவர்கள் எளியவர்களை தாக்கி கொடுமையிழைக்கும் பொழுது தான் அவர்களிடையே தீவிரவாத அமைப்புகளும் உருவாகின்றது. உலகம் முழுவதும் இப்படியொரு அமைதியின்மையே நம்மால் காணமுடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கேளிக்கை அரங்குகள்

இன்று மனிதன் தன்னுடைய வளர்ச்சிக் கேற்ப தன்னை மறந்து தாம் எதற்காகப் படைக்கப் பட்டுள்ளோம் என்பதையும் மறந்து இவ்வுலகத்தில் உள்ள அனைத்து சுகங்களையும், இன்பங்களையும் அனுபவித்திட துடிக்கின்றான். உலக வாழ்க்கையில் மோகம் கொண்டவனாக திரிகின்றான். இதனால் எந்த கீழ்தரமான செயல்களை கூட செய்யத் தயங்குவதில்லை.

அல்லாஹ் கூறுகின்றான்,
'இவ்வுலக வாழ்வென்பது ஏமாற்றக் கூடிய அற்ப இன்பமேயன்றி வேறில்லை.' (அல்குர்ஆன் 3:185)

ஆனால் இன்று அற்ப இன்பத்தை அனுபவிக்க வித விதமான கேளிக்கை அரங்குகளை, இசைக்கச்சேரிகளை மனிதன் உருவாக்கி விட்டான். இன்னும் இது போன்ற எத்தனையோ விசயங்களை நாம் சொல்லிக் கொண்டே போகலாம்.

முற்காலத்தில் எந்த தீமைகள் மக்களிடத்தில் பரவிக் கிடந்ததோ அதை விட அதிகமாகவே இன்று உலகில் தீமைகள் மலிந்து கிடப்பது முற்றிலும் உண்மையான விசயமாகும்.

இஸ்லாமியர்களின் நிலை

இஸ்லாத்தை அல்லாஹ பரிபூரணமாக்கி இஸ்லாமியர்களை சிறந்த சமுதாயத்தினராக ஆக்கினான்.

அல்லாஹ் கூறுகின்றான்,
'மனித இனத்தை சீர்படுத்துவதற்காக தோற்றுவிக்கப்பட்டிருக்கும் மிகச் சிறந்த சமூகத்தவராய் நீங்கள் இருக்கின்றீர்கள். நீங்கள் நன்மை புரியும்படி ஏவுகின்றீர்கள், தீமையிலிருந்து தடுக்கின்றீர்கள். மேலும் அல்லாஹ் மீது நம்பிக்கை கொள்கின்றீர்கள்.

(அல்குர்ஆன் 3:110).

மனித இனத்தை சீர்படுத்துவதற்காக தோற்றுவிக்கப்பட்டிருக்கின்ற உயர்ந்த சமுதாயத்தினராகிய நாம் இன்று எந்த நிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றோம். உலகம் முழுவதும் இன்று முஸ்லிம்கள் பரவி விட்டார்கள். இஸ்லாம் நுழையாத நாடுகளே இல்லை. இஸ்லாம் என்று சொல்லிக் கொள்ளும் அளவிற்கு நிறைய நாடுகள் வளர்ந்து விட்டன. இருப்பினும் எந்த நோக்கத்திற்காக அல்லாஹ் நம்மைப் படைத்தானோ அந்த நோக்கத்தை நிறைவு செய்பவர்கள் குறையாகவே இருக்கின்றார்கள்.

ஒரு பிரிவினர் மேலை நாட்டு மோகத்தில் ஆர்வப்பட்டவர்களாகவும், இஸ்லாமார்க்கதை மறந்து தமது சகல நிகழ்வுகளிலும் அந்நிய கலாசாரங்களை துருவித்துருவி அவர்களை முந்திக்கொண்டு பின்பற்றக் கூடியவர்களாகவும் ஆகிவிட்டார்கள். ஒரு பிரிவினர் வல்லரசாகிய அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற இறை நிராகரிப்பாளர்களை தங்களது பாதுகாவலர்களாகவும், ஆதரவாளர்களாகவும் ஆக்கிக் கொண்டுள்ளனர். அல்லாஹ்வை பாதுகாவலனாக ஏற்றுக் கொள்ளாமல் இறை நிராகரிப்பாளர்களை ஏற்றுக் கொணடதால் இன்று அவர்களுக்கு பணிந்து போகக் கூடிய சூழ்நிலையும், அவர்களுடைய சில ஏவல்களுக்கு தலை ஆட்டிக் கொண்டு சுய கௌரவத்தை இழந்து நிற்கின்றன.

இன்னும் ஒரு பிரிவினர் முஸ்லிம் பெயர் தாங்கிகளாக திரிகின்றனர். அவர்களிடம் எந்த இறைவணக்கமும் இல்லை. முஸ்லிம்கள் அல்லாஹ்வை பாதுகாவலனாக ஏற்றுக் கொள்ளாமல் இன்றைய மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்களை பாதுகாவலர்களாக நினைத்து அவர்கள் பின்னால் ஓடிக் கொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட நிலையே இன்று உலக இஸ்லாமியர்களிடத்தில் காணப்படுகின்றன.

இதுவரையில் அல்லாஹ் படைத்த இந்த உலகத்தின் ஒழுங்கமைப்பைப் பற்றியும் நோக்கத்தைப் பற்றியும் ஆராய்ந்தோம்.

இறைவன் எந்த நோக்கத்திற்காக மனிதனை படைத்தானோ அந்த நோக்கத்தை நிறைவு செய்வதற்கு தன் இறைத் தூதர்கள் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்வழி காட்டி வந்ததையும், அதே சமயத்தில் ஷைத்தானும் மனிதனை நேர்வழியில் இருந்து தீய வழிக்கு அழைத்துச் செல்ல நாலாபுறமும் சூழ்ந்து இருப்பதையும் பார்த்தோம்.

இறுதி நபித்துவத்தைப் பற்றியும் இறுதி தீர்ப்பு நாளுக்குண்டான உலக அழிவுகளை நம்மவர்களே சந்திக்க இருக்கின்றார்கள் என்பதை ஆதாரப் பூர்வமாக ஆராய்ந்தோம்.

முன்பு வாழ்ந்த சமுதாயத்தினர்களின் நிலையையும், அவர்கள் எதற்காக அழிக்கப்பட்டார்கள் என்பதையும் திருக்குர்ஆன் மூலமாக ஆராய்ந்தோம். அதேபோல் இன்றைய உலகத்தினருடைய நிலை, இஸ்லாமியர்களின் நிலை ஆகியவற்றையும் ஆராய்ந்தோம்.

இவை ஒன்றோடு ஒன்றை சம்பந்தப்படுத்தி சிந்தித்து ஆராய்ந்து பார்த்தால் இறைவன் ஏற்படுத்தும் இந்த பூகம்பத்தைப் பற்றி தெளிவாக ஒருமுடிவுக்கு வரமுடியும்.

அல்லாஹ் மாபெரும் கருணையாளன் தன் படைப்புகளின் மீது அளப்பரிய அன்பும், பரிவும் கொண்டவனாக இருக்கின்றான். அவன் எந்த தேவையும் அற்றவன். நாம் தான் அவனிடத்தில் தேவை உள்ளவர்களாக இருக்கின்றோம். அல்லாஹ் பொறுமையாளன் அதனால் தான் மனிதகுலம் புரியும் கொடுமைகளுக்கு உடனுக்குடன் தண்டிக்காமல் தனக்கென்று ஒரு நியதியை வகுத்துக் கொண்டு பொறுமையுடன் இருக்கின்றான். அதோடு சிறந்த பாதுகாவலனாகவும், மன்னிக்க கூடியவனாகவும் இருக்கின்றான்.

அல்லாஹ் கூறுகிறான்,
'வானங்கள் மற்றும் பூமியில் உள்ளவை அனைத்தும் அவனுக்கே உரியனவாகும். (அவை அனைத்தையும் பராமரித்து பாதுகாக்கும்) பொறுப்பினை ஏற்பதற்கு அவனே போதுமானவன்.'(அல்குர்ஆன் 4:171).

இப்படி படைப்பினங்களை பாதுகாக்கக்கூடிய இறைவன் மக்களை காரணமின்றி அழிப்பது அவனது நியதியில் இல்லை. தக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமின்றி அல்லாஹ் எதையும் படைப்பதும் இல்லை. அதே போல் தக்க காரணமின்றி அல்லாஹ் எதையும் அழிப்பதும் இல்லை.

அல்லாஹ் சிலருக்கு சிலரைவிட உயர்வையும், அந்தஸ்தையும் சிறப்பையும் தந்திருக்கின்றான். அந்த அடிப்படையில் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் உம்மத்தாகிய நமக்கு அல்லாஹ் சிறப்புகளை வழங்கியிருக்கின்றான். காரணம் முன்பு வாழ்ந்த சமூகத்தினர்கள் இறைத் தூதர்களின் மத்தியிலே வாழ்ந்தார்கள். இன்று நாம் இறைத் தூதரையும், இறைத் தூதர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர்களையும் நாம் பார்த்ததில்லை. நபி(ஸல்) அவர்கள் காட்டித் தந்த வழிமுறைப்படியும், இறை மறையின் படியும் நாம் நம்பிக்கை கொண்டு வாழ்வதால் தான். இருப்பினும் இறைவன் முன் அனைவரும் சமம் என்ற ரீதியில் தண்டனைகள் எல்லோருக்கும்ஒன்றுதான். அந்த அடிப்படையில் இன்று அல்லாஹ் அழிவுகளை தந்து எச்சரிப்பது நம்முடைய சீர்கேடுகளை சீர்தூக்கிப் பார்த்து அதை திருத்திக் கொள்வதற்குரிய அவகாசம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இறைவன் கூறுகின்றான்,
'அல்லாஹ் மக்களை அவர்கள் செய்யும் தீய செயல்களுக்காக (இவ்வுலகிலேயே) தண்டிப்பானேயானால், பூமியின் மீது எந்த உயிரினத்தையும் அவன் விட்டு வைத்திருக்க மாட்டான். ஆயினும் அவர்களுக்கு ஒரு குறிப்பிட்டகாலம் வரை அவகாசம் அளித்துக் கொண்டிருக்கின்றான். பிறகு அவர்களுக்குரிய காலம் பூர்த்தியானால் திண்ணமாக அல்லாஹ் தம் அடிமைகளைப் பார்த்துக் கொள்வான்.'
(அல்குர்ஆன் 35:45).

இன்னொரு வசனத்தில் கூறுகிறான்,
'இதற்கு முன்பு நாம் எந்த ஊரை அழித்திருக்கின்றோமோ அதற்கு ஒரு குறிப்பிட்ட காலத் தவணை நிர்ணயிக்கப்பட்டே இருந்தது. எந்தச் சமூகத்தினரும் தமக்குரிய காலத் தவணை முடியும் முன்பே அழியவும் முடியாது, பின்பு வாழவும் முடியாது.'
(அல்குர்ஆன் 15:4-5).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே இன்று ஆங்காங்கே நடக்கும் பூகம்பங்கள், கடலடி பூகம்பத்தினால் ஏற்படும் இராட்சத அலைகளின் சீற்றங்கள், நம்முடைய தீய செயல்களை திருத்திக் கொண்டு வாழ ஒரு அவகாசம் தான். இதை நாம் உணர்ந்து நம்முடைய செயல்களை சீர்திருத்திக் கொள்ளவில்லையென்றால் பின்னால் ஒரு மாபெரும் அழிவை சந்திக்க வேண்டி வரும். இது குறிப்பிட்ட சமூகத்தினர் மீதோ, குறிப்பிட்ட நாட்டின் மீதோ இல்லை உலகம் முழுவதிலுமோ ஏற்படலாம். நடந்து முடிந்திருக்கின்ற பூகம்பங்கள் நம்முடைய செயல்களை திருத்திக் கொள்ள ஒரு அவகாசம் என்றால் நாம் இதிலிருந்து நிறைய படிப்பினைகள் பெறவேண்டியுள்ளது. காரணம் நாம் மறுமையின் வெற்றியை அடைய இங்கு சோதனைக்காக அனுப்பப்பட்டவர்கள்.

சோதனை தான் வாழ்க்கை

அகில உலகங்களையும் படைத்து பரிபாலனம் செய்யக் கூடிய இறைவன் தான் இந்தப் பூமியில் மனிதர்களையும், இதர உயிரினங்களையும் படைத்துள்ளான். ஒவ்வொரு மனிதனும் பிறக்கிறான். அதே போல் மரணமடைகின்றான். இதில் யாரும் விதிவிலக்கல்ல. இந்தப் பிறப்பிற்கும், மரணத்திற்கும் இடைப்பட்ட இந்த வாழ்க்கை எதற்காக என்று கேள்வி எழும்புகிறதல்லவா?

இது பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறிக்காட்டுகிறான்,
'உங்களில் எவர் அழகான செயலுள்ளவர் என்பதைச் சோதிப்பதற்காக அவன்(அல்லாஹ்) மரணத்தையும், வாழ்வையும் படைத்தான்.'

(அல்குர்ஆன் 67:2)

எனவே, சோதனை என்பது மனிதன் பிறந்ததிலிருந்து இறக்கும் வரை நிகழ்ந்து கொண்டுதான் இருக்கும். இதில் முஸ்லிம்கள், நிராகரிப்பாளர்கள் என்ற எந்த வித்தியாசமும் இல்லை. சோதனைகள் எந்தெந்த வடிவங்களில் வரும் என்பதை திருமறைக்குர்ஆன் பின்வருமாறு கூறிக்காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், பொருட்கள், உயிர்கள், விளைச்சல்கள் என்பவற்றின் இழப்பினாலும் சோதிப்போம். ஆனால் பொறுமை உடையவர்களுக்கு நபியே நீர் நன்மாராயம் கூறுவீராக!' (அல்குர்ஆன் 2:155)

சோதனைகள், கஷ்டங்கள் இறை நம்பிக்கையாளர்களுக்கும் ஏக இறைவனை நிராகரிக்கக் கூடியவர்களுக்கும் பொதுவானவை. சோதனைகளை எதிர் கொள்வதில் இரு தரப்பினருக்கும் இடையே பலத்த வேறுபாடு இருக்க வேண்டும் என்று அல்லாஹ் விரும்புகின்றான். ஆனால், இறைநம்பிக்கை கொண்டுள்ளோம் என்று கூறக்கூடியவர்கள் பெரும்பாலும் ஈமான் கொண்டு விட்டால் போதும், நமக்கு எந்தச் சோதனையும் வரக்கூடாது என்று கருதுகிறார்கள். அவர்களுக்கு ஏதாவது துன்பம் வந்து விட்டால், 'நான் அல்லாஹ்வை நம்புகிறேன் தானே, ஏன் என்னைச் சோதிக்கிறான' என்று கேட்கிறார்கள்.

சிலர் தனக்கு மிக நெருங்கியவர்கள் இறந்து விட்டால் 'அல்லாஹ்வே உனக்கு கண்ணில்லையா? உனக்கு இரக்கமில்லையா?' என்று நிராகரிப்பான வார்த்தைகளை உதிர்க்கிறார்கள். இன்னும் மார்க்கத்திற்கு முரணாக நெஞ்சில் அடிப்பவர்களாகவும் ஒப்பாரி வைத்து அழுபவர்களாகவும் இருக்கிறார்கள். நாம் ஈமான் கொண்டு விட்டோம். நாம் முஸ்லிம்கள், எனவே நமக்குத் துன்பம் வரக்கூடாது என்று கருதுகிறார்கள்.

'நாங்கள் ஈமான் கொண்டிருக்கிறோம' என்று கூறுவதனால்(மட்டும்) அவர்கள் சோதிக்கப்படாமல் விடப்படுவார்கள் என்று மனிதர்கள் எண்ணிக் கொண்டார்களா? ' (அல்குர்.ஆன் 29:2)

எனவே, ஈமான் கொண்டு விட்டால் சோதனை வரக்கூடாது அல்லது வராது என எண்ணக்கூடாது. சோதனைகள் வரும்போது தான். பொறுமையுடன் ஈமானில் உறுதியாக இருக்க வேண்டும்.

'உங்களுக்கு முன் சென்றோருக்கு ஏற்பட்ட சோதனைகள் உங்களுக்கும் ஏற்படாமல் சுவர்க்கத்தில் நுழையலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றீர்களா?' (அல்குர்ஆன் 2:214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பொறுமையைக் கடைப்பிடிப்பவர்கள் யார் என்று அல்லாஹ் (பரிசோதித்து) அறியாமல் நீங்கள் சுவனத்தில் நுளைந்து விடலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றீர்களா?'

(அல்குர்ஆன் 3:142)

சோதனைகள் வரும் போது இறை நம்பிக்கையாளன் எப்படி நடக்க வேண்டும் என்பதை பின்வரும் திருமறைக் குர்ஆன் வசனங்கள், ஹதீஸ்கள் மூலம் நாம் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.

'(பொறுமை உடையவராகிய) அவர்களுக்கு துன்பம் ஏற்படும் போது, நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள். நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்பவர்கள்' என்று கூறுவார்கள்.
'இத்தகையோர் மீது தான் அவர்களுடைய இறைவனின் நல்லாசியும் நற்கிருபையும் உண்டாகின்றன. இன்னும் இவர்கள் தாம் நேர் வழியை அடைந்தவர்கள்.'

(அல்குர்ஆன் 2:156,157)

உண்மையான இறை நம்பிக்கையாளன் தன் இறைவனின் சோதனையைப் பொருந்திக் கொண்டு, பொறுமையுடன் படைத்த இறைவனாகிய அல்லாஹ்வையே சார்ந்து நிற்பான். மேலும், நமக்கு ஏற்படும் சோதனைகள் இவ்வுலகில் மிகவும் சிரமமாக இருந்தாலும், நம்முடைய பாவங்களை அழித்து நம்மை பரிசுத்தப்படுத்துகிறது. நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

'இறைநம்பிக்கை கொண்ட ஆண், பெண்களுக்கு சோதனை இருந்து கொண்டே தான் இருக்கும். அவரது விசயத்திலும் அவரது பிள்ளைகள் விசயத்திலும் (சோதனை தொடரும்). எதுவரையெனில் அவர்தம் இரட்சகனை எந்தத் தவறும் இல்லாத நிலையில் (பரிசுத்தமாக)சந்திக்கும் வரை.'

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி).

நூல்: திர்மிதீ.

எந்தக் கடுமையான சோதனைகளையும், சிரமங்களையும் பொருந்திக் கொண்டு பொறுமையோடு இருந்தால், அவர்கள் இந்த உலகில் செய்த பிழைகள் அனைத்தையும் அல்லாஹ் மன்னித்து விடுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமையில், எவ்வித பாவமற்ற பரிசுத்தமான நிலையில் தங்களது இரட்சகனைச் சந்தித்து சுவனத்தைப் பெறக் கூடிய பாக்கியத்தை பெறுகிறார்கள்.

நடந்து முடிந்த அனர்த்தத்தினால் நாம் பெறும் படிப்பினைகள்

நேற்றுவரை வாழ்விலும், பொருளாதாரத்திலும் செழித்துக் கொண்டிருந்த சமுதாயம், ஒரு வினாடியில் அவர்கள் நினைத்துக் கூட பார்த்திராத அளவுக்கு அவர்களுடைய தலையெழுத்து மாற்றப்பட்டது என்றால் நம்முடைய செல்வம், நமக்கிருக்கும் வசதிவாய்ப்பு இதெல்லாம் இறைவன் நாடினால் ஒரு வினாடியில் பறிக்கப்பட்டு விடும். எனவே அவைகளைப் பற்றி பூரிப்பு அடையாமலும், பெருமை கொண்டு அலையாமலும், இறைவன் கொடுத்த வசதி வாய்ப்புகளை நினைத்து அவனுக்கு நன்றி சொல்லி வாழ வேண்டும் என்ற உணர்வும் இந்த உலகத்தில் நமக்கு எதுவும் நிரந்தரம் இல்லை என்ற படிப்பினை பெறுகிறோம். அதிகார செருக்கோடும், செல்வச் செருக்கோடும் நடந்து வந்தவர்கள் இன்று நிர்க்கதியாளர்களாக வெளியில் வந்து நிற்கும் பொழுது, பூமியில் பெருமை கொண்டு அலையாமல் பணிவோடு நடக்க வேண்டும். இறைதந்த செல்வத்தையும், அதிகாரத்தையும் தவறாக பயன்படுத்தக் கூடாது என்ற படிப்பினை பெறுகிறோம்.

அல்லாஹ் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவாகள் என்று பார்ப்பதில்லை தண்டனை எல்லோருக்கும் ஒன்று தான். 'உங்களில் சிறந்தவர் ஒழுக்கத்தால் சிறந்தவரே' என்ற நபிமொழி பிரகாரம் ஒழுக்கத்தில் சிறந்து வாழ்பவர்கள் தான் சிறந்தவர்கள் என்ற படிப்பினை பெறுகிறோம்.

கணவன், மனைவி, பிள்ளைகளை காப்பாற்ற முடியாத சூழ்நிலை, மனைவி, கணவனை, பிள்ளையை காப்பாற்ற முடியாத சூழ்நிலை இவைகள் மஹ்ஷர் நிகழ்வை எமக்கு ஞாபகப்படுத்துகிறது.

அல்லாஹ்வின் தண்டனை எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் ஏற்படலாம். அதை தடுத்து நிறுத்துபவர் யாருமில்லை. இதிலிருந்து அல்லாஹ்வைத் தவிர வேறு எந்த புகலிடமும் இல்லை என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பினை பெறுகிறோம். இப்படியாக எத்தனையோ படிப்பினைகள் இறைவன் கொடுத்த பகுத்தறிவைப் பயன்படுத்தும் போது நாம் பெறமுடிகிறது.

ஆனால் இன்று என்ன நடக்கின்றது என்றால், ஓரிடத்தில் பூகம்பம் ஏற்பட்டால் அதன் அழிவுகளை கண்டு மனிதன் பரிதாபம் கொள்கிறான். அதைப் பற்றி இரண்டு நாள் கவலையடைகிறான். பிறகு திரும்பவும் அவன் பழைய நடவடிக்கைக்கே திரும்பி விடுகிறான். இதனால் அவன் எந்த படிப்பினையும் பெறுவதில்லை.

நாம் இது போன்ற அழிவிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள முதலில் நாம் எந்த நோக்கத்திற்காக படைக்கப்பட்டுள்ளோம் என்பதினை கருத்தில் கொண்டு நம்முடைய நிலைகளை சரிசெய்து அல்லாஹ்வுக்கு முற்றிலும் பணிந்து வாழக் கூடிய இறை நம்பிக்கையாளராகத் திகழ அல்லாஹ் அருள் செய்வானாக! (ஆமின்).

****

எவர் தம்மை இறைவனிடம் முழுமையாக ஒப்படைத்து, செயலிலும் நல்ல நடத்தையை மேற்கொண்டவராய் இருக்கின்றாரோ அவருக்குரிய நற்கூலி அவருடைய இறைவனிடம் அவருக்கு உண்டு. மேலும் அத்தகையவர்களுக்கு எவ்வித பயமுமில்லை. அவர்கள் கவலையும் அடையமாட்டார்கள்.

(அல் குர்ஆன் 2: 112)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பொறுமை உடையோராகிய) அவர்களுக்கு துன்பம் ஏற்படும் போது 'நிச்சயமாக நாம் அல்லாஹ்விற்கே உரியவர்கள். நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பச் செல்வோம' என்று கூறுவார்கள்.

(அல்குர் ஆன் 2: 156)

அல்லாஹ் கூறுகின்றான், உலகில் என் அடியானின் நேசத்திற்குரிய ஒருவரை நான் கைப்பற்றி, அதன் மீது என் அடியான் பொறுமை கொண்டு நற்கூலியை ஆதரவு வைத்தால் அவனுக்கு சுவர்க்கத்தை தவிர வேறு எதுவும் இல்லை என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி)

நூல்: புகாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* எமது அல்-ஈமான் சனசமூக நிலையம் இது போன்ற வெளியீடுகளை அவ்வப்போது தந்து கொண்டிருப்பதை அறிவீர்கள். எமது இலவச வெளியீடுகள் முற்றிலும் நலன் விரும்பிகளின் அன்பளிப்பிலேயே தங்கியுள்ளது. இப்பணியில் இணைந்து கொள்ள விரும்பும் தனவந்தர்களின் உதவிகளை எதிர்பார்க்கிறோம்.

* எமது இலவச வெளியீடுகளை தபால் மூலம் பெற விரும்புவோர் 9/= பெறுமதியான முத்திரையினை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

* இவ்வெளியீடு பற்றிய உங்களது ஆக்க பூர்வமான விமர்சனங்களை வரவேற்கின்றோம்.

தொடர்புகளுக்கு,

Al-Eeman Community Centre,
(Al-Eeman Library)
Vanniyar Street,
Nintavur - 01

E-mail : aleeman_library @ yahoo.com

Banker : Peoples Bank, Nintavur.
A/C No : 2500

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்தனைகள்..........

கடந்த 26.12.2004 அன்றைய சுனாமி அனர்த்தத்தில் இறையடி எய்தியவர்களுள் Dr.ஏ.எம்.எம்.அஷ்ரப் MBBS(SL) அவர்களும் ஒருவர். எமது அல்-ஈமான் சனசமூக நிலையத்தின் ஆலோசகராக இருந்து அதன் வளர்ச்சிக்கு அரும்பங்காற்றிய இவர், அல்-ஈமான் பிரசுரமான 'புகைத்தல் தடுக்கப்பட்டதா?' என்ற புத்தக வெளியீட்டுக்காக கட்டுரையினை யார்த்து வழங்கி அதன் வெளியீட்டில் முக்கிய பங்கெடுத்தவர். வைத்தியத்துறை உட்பட கலை, இலக்கியம் போன்ற பல்வேறு அறிவியற் துறைகளில் காலடிபதித்தவர். எமது அடுத்த வெளியீடான 'இஸ்லாத்தின் மருத்துவ உண்மைகள்' என்ற புத்தக வெளியீட்டுக்காக ஆய்வுகளை மேற்கொண்டு கட்டுரைகளை யார்த்துக் கொண்டிருந்தவர். சன்மார்க்கப்பணிக்காக நேரத்தை ஒதுக்கி உழைத்தவர். நண்பர்களோடு பேரன்புடன் பழகி அவர்களை அறிவு மழையில் நனையச் செய்தவர்.

இப்பெருந்தகை மருத்துவ சேவை செய்து கொண்டுடிருக்கும் போதே இவ்வுலக வாழ்க்கையை முடித்துக் கொண்டார் என்ற செய்தியை இன்னும் எமது இதயங்கள் ஏற்க மறுக்கின்றன. இவ் இழப்பு அவரது குடும்பத்தாருக்கு மட்டுமல்ல எமது சமூதாயத்திற்கே ஒரு பேரிழப்பாகும். யா அல்லாஹ்! Dr.அஷ்ரப் அவரது மனைவி, பிள்ளைகளுக்கும் இவ்வனர்த்தத்தில் உயிரிழந்த அனைத்து முஸ்லிம்களுக்கும் 'பிர்தௌசுல் அஃலா' என்ற சுவனத்தை வழங்கி அவர்களது மறு உலக வாழ்வை செழிப்பானதாக்கி வைப்பாயாக! (ஆமின்)

-முகம்மது ஜபறுல்லா-

பிரிண்ட்கொம் நிந்தவூர் 067 2250169

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org